செ.வெ.எண்.05 நாள்.04.08.2020

# தரிசு நிலங்களை விளைநிலங்களாக மாற்றும் திட்டம் மாவட்ட ஆட்சியர் ஆய்வு

விழுப்புரம் மாவட்டத்தில் பயிர் சாகுபடி பரப்பினை அதிகரிக்கும் வகையில் நடப்பாண்டில் வேளாண்மைத்துறையின் மூலம் தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின்கீழ் தொடர்ந்து 5 ஆண்டுகளுக்கு மேல் தரிசாக உள்ள நிலங்களை விளைநிலங்களாக மாற்றி பயிர் சாகுபடி மேற்கொள்வதற்கு விவசாயிகளுக்கு 50 சதவிகிதம் மானியம் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மாவட்டத்தில் 345 எக்டரில் முதற்கட்டமாக இப்பணி தொடங்கப்பட்டுள்ளது. இதற்கு அரசு மானியத் தொகை ரூ.38 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின்கீழ் முட்புதர்களை அகற்றுதல், நிலத்தினை சமன்செய்தல், உழவு மற்றும் விதைப்பு செய்தல் போன்ற பணிகளுக்கு பின்னேற்பு மானியம் வழங்கப்படவுள்ளது. மேலும் விதைகள், உயிர் உரங்கள், நுண்ணூட்ட உரங்கள் ஆகியவை வேளாண்மை விரிவாக்க மையம் மூலம் வழங்கப்படவுள்ளது. ஒரு விவசாயிக்கு அதிகபட்சமாக 2 எக்டர் வரை மானியம் வழங்கப்படும்.

இத்திட்டத்தில் தரிசுநிலங்களை விளைநிலமாக மாற்றி சாகுபடி செய்வதற்கு சிறுதானியம் மற்றும் எள் சாகுபடி மேற்கொள்ள எக்டருக்கு ரூ.10000/—, பயறுவகை பயிர்களுக்கு எக்டருக்கு ரூ.9250/— மற்றும் மணிலா சாகுபடி மேற்கொள்வதற்கு எக்டருக்கு ரூ.18000/— வீதம் 50 சதவிகிதம் பின்னேற்பு மானியமாக வழங்கப்பட உள்ளது.

இத்திட்டத்தின்கீழ் காணை வட்டாரத்தில் மாம்பழப்பட்டு கிராமத்தில் திரு.சுந்தரம், த/பெ.சுப்புராயலு அவர்களது 1 எக்டர் பரப்பில் முட்புதர்கள் அகற்றும் பணியினையும் மற்றும் உதயகுமார், த/பெ.சண்முகம் என்ற விவசாயியின் வயலில் உழவுப்பணி மேற்கொள்வதினையும் விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் அவர்கள் ஆய்வு செய்தார்கள். இந்நிகழ்ச்சியில் திரு.ராஜசேகர், வேளாண்மை இணை இயக்குநர், விழுப்புரம், திரு.கென்னடி ஜெபக்குமார், வேளாண்மை துணை இயக்குநர்(மத்தியத்திட்டம்), விழுப்புரம் திரு.இரா.பெரியசாமி, வேளாண்மை துணை இயக்குநர் / மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(விவசாயம்), விழுப்புரம் மற்றும் திரு.சரவணன், வேளாண்மை உதவி இயக்குநர், காணை ஆகியோர் உடனிருந்தனர்.

..............................................................................................................................

வெளியீடு. செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் — விழுப்புரம்

செ.வெ.எண்.05 நாள்.04.08.2020

# துணை நிலை நீர் மேலாண்மை திட்டத்தின்கீழ் கூடுதல் மானியம் பெற்று விவசாயிகள் பயன்பெற மாவட்ட ஆட்சியர் வேண்டுகோள் !

...

விழுப்புரம் மாவட்டத்தில் நுண்ணீர் பாசன திட்டத்தின்கீழ் பயன்பெறும் விவசாயிகளுக்கு துணை நிலை நீர் மேலாண்மை திட்டத்தின்கீழ் கூடுதலாக மானியம் பெற்று பயன்பெறுமாறு விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் திரு.ஆ.அண்ணாதுரை, இ.ஆ.ப. அவர்கள் கேட்டுக்கொண்டுள்ளார்.

கோலியனூர் வட்டாரம் வளவனூர் கிராமத்தில் கண்ணப்பன் குமாரர் திரு.பாஸ்கரன் அவர்களது வயலில் துணைநிலை நீர் மேலாண்மை திட்டத்தின்கீழ் ஆழ்துளை கிணறு அமைக்கும் பணியினை ஆய்வு செய்து பேசுகையில் விழுப்புரம் மாவட்டத்தில் பாரத பிரதமர் நுண்ணீர் பாசனத் திட்டத்தின்கீழ் சொட்டுநீர் பாசனம், தெளிப்புநீர் பாசனம், மழைத்தூவுவான் போன்ற நீர் சிக்கன அமைப்புகளை அமைத்திட ரூ.5816 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு சிறு/குறு விவசாயிகளுக்கு 100 சதவிகித மானியத்திலும், பிற விவசாயிகளுக்கு 75 சதவிகித மானியத்திலும் நுண்ணீர் பாசன கருவிகள் வழங்கப்பட்டு வருகிறது. மேலும் விவசாயிகளது நலன் கருதி பாதுகாப்பான குறு வட்டங்களில் குறுகிய ஆழக்கிணறு அல்லது குழாய் கிணறு அமைப்பதற்கு 50 சதவிகிதம் அல்லது ரூ.25000/—, டீசல் பம்ப்செட் அல்லது மின்மோட்டார் பம்ப்செட் அமைக்க 50 சதவிகிதம் அல்லது ரூ.15000/—, வயலுக்கு அருகில் பாசன நீரை கொண்டு செல்ல நீர்பாசன குழாய் அமைப்பதற்கு 50 சதவிகிதம் அல்லது எக்டருக்கு ரூ.10000/— வீதமும், பாதுகாப்பு வேலியுடன் தரைநிலை நீர் தேக்கத் தொட்டி அமைப்பதற்கு 50 சதவிகிதம் அல்லது ஒரு கனமீட்டருக்கு ரூ.350/— வீதம் அதிகபட்சம் ரூ.40000/— வீதம் கூடுதல் மானியமாக வழங்கப்படுகிறது. இந்த துணைநிலை நீர் மேலாண்மை திட்டத்திற்காக விழுப்புரம் மாவட்டத்திற்கு ரூ.1324 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது எனவும், இதற்காக விவசாயிகள் துணை நிலை சாதனங்களை அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களிடமிருந்து பெற்று தங்களது வயலில் பொருத்திக் கொள்ள வேண்டும். உரிய ஆய்வுக்கு பின்னர் இதற்கான மானியத் தொகை சம்மந்தப்பட்ட விவசாயிகளின் வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்படும். இதற்காக விவசாயிகள் தங்களது சிட்டா, அடங்கல், குடும்ப அட்டை நகல், நிலத்தின் வரைபடம், வங்கி கணக்கு புத்தக நகல், சிறு/குறு விவசாயிகளுக்கான சான்று மற்றும் புகைப்படம் முதலியவற்றை தங்கள் பகுதி வேளாண்துறை அலுவலர்களிடம் சமர்ப்பித்து இதற்கான மானியத்தினை பெற்று பயனடையுமாறு மாவட்ட ஆட்சியர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

..........................................................................................

வெளியீடு. செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் — விழுப்புரம்